**Deposition of Witness**
**Additional Subordinate Judge, Tenkasi.**
Mcop 322 of 2023
ம.சா.1 முத்துலெட்சுமி

| | | |
|---|---|---|
| Name | : | முத்துலெட்சுமி |
| Father's name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Religion | : | |
| Occupation | : | |
| Age | : | |
| Date | : | 04.06.2025 |

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு முதல் விசாரணை நிருபண வாக்குமுலம் தாக்கல்

நான் இந்த வழக்கில் மனுதாரர். நான் என்னுடைய நிருபண வாக்குமுலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் கூறப்பட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மை. அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். முதல் தகவல் அறிக்கை சான்றிட்ட நகல் ம.சா.ஆ 1. எனது கணவரை பிரேதம் செய்யததற்கான Morturary card ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ 2, டி.என்.48 பிபி 2383 என்ற வாகனத்தின் காப்பீடு சான்று ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ 3. டி.என்.79.ஜே.4579 என்ற வாகனத்தின் காப்பீடு சான்று ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ 4. விபத்தில் இறந்துபோன முத்துகிருஷ்ணனின் பிரேத கூறாய்வு அறிக்கை ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ 5. மேற்படி முத்துகிருஷ்ணனின் வருட ஊதிய சான்று ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ 6. மேற்படி முத்துகிருஷ்ணனின் கல்லூரி படிப்பு நிறைவேறுதல் சான்று அசல் ம.சா.ஆ 7. மேற்படி முத்துகிருஷ்ணனின் கல்லூரி மாற்று சான்று அசல் ம.சா.ஆ 8. மேற்படி முத்துகிருஷ்ணனின் வாரிசு சான்று ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ 9. டி.என்.48 பிபி 2383 என்ற பதிவு எண் கொண்ட வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ 10. சம்பவயிடம் பற்றிய மாதிரிவரைபடம்

ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ 11. சம்பவயிம் பற்றிய பார்வைமகசர் ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ 12. குற்ற எண்.227/2023 ன் குற்ற இறுதியறிக்கை ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ 13. (ம.சா.ஆ 6 ஊதியச்சான்று 2 ம்எதிர்மனுதாரர் தரப்பில் ஆட்சேபனை செய்யப்பட்டு ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது) மனுபடி உத்தரவாக வேண்டுகிறேன்.

2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை

நான் வேலை எதுவும் பார்க்கவில்லை. நான் 12 ம் வகுப்பு படித்துள்ளேன். வழக்கு தாக்கல் செய்ய நான் தான் வழக்கறிஞருக்கு விபரம் சொன்னேன். 2 ம்எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிருரையை படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். அதை மறுத்து ஆவண சாட்சியம் அளிக்கவில்லை என்றால் சரியல்ல. விபத்தை நான் நேரில் பார்த்தேனா என்றால் இல்லை. விபத்தில் இறந்து போனது என் கணவர். என் கணவர் விபத்து சமயம் ரெட் டாக்ஸி என்ற வாகனத்தில் பயணம் செய்து கொண்டிருந்தார் என்றால் சரிதான். என் கணவர் பயணம் செய்த வாகனத்தின் 1 ம்எதிர்மனுதாரரின் ஒட்டுனர் கவனமாக தான் வாகனத்தை ஓட்டினார் என்றாலும் 3 ம்எதிர்மனுதாரரின் ஒட்டுனர் தான் வாகனத்தை போக்குவரத்து விதிகளுக்கு முரணாக எவ்வித சைகையும் செய்யாமல் வலதுபுறம் நிறுத்தியதால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. விபத்துக்கு 1 ம் எதிர்மனுதாரர்காரணம் அல்ல என்றாலும், 3 ம்எதிர்மனுதாரர் தான் காரணம் என்றாலும் சரியல்ல. விபத்து நடந்த இடம் மதுரை – திருச்சி தேசிய நெடுஞ்சாலை என்றால் சரிதான். விபத்து சம்பந்தமாக நானோ மற்ற மனுதாரர்களோ புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். புகார் கொடுத்தது யார் என்றால் அது எனக்கு தெரியாது. என் கணவரின் வயது, வருமானம், வேலை ஆகியவற்றை காட்டக்கூடியஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என் கணவா் வருமான வரி செலுத்தவில்லை. ம.சா.ஆ 6 வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ம.சா.ஆ 6 ஆவணத்தில்

இணைக்கப்பட்டுள்ளதில் முத்திரை. கையெழுத்து எதுவும் இல்லை என்றால் சரியல்ல. பல்வேறு தலைப்புகளில் நான் கோரியுள்ள இழப்பீடு தொகை மற்றும் வட்டி வகிதம் அதிகமானது என்றால் சரியல்ல. 2ம்எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல.. ம.சா.ஆ 6 யாரால் வாங்கப்பட்டது என்றால் கம்பெனியில் என்னால் வாங்கப்பட்டது. என் கணவர் இறந்தபிறகு வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. அதற்கு முன்பே வாங்கப்பட்டது.

(ஒம்)ஏ.பிஸ்மிதா

கூடுதல் சார்பு நீதிபதி,
தென்காசி.